ஓலை 139| ஓசை 262| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை





சுத்தானந்த பாரதி

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது.

## பொருள்

ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும்,
அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால்
அதுவே அவனுக்கு நல்லது

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நோன்பென் பதுவே கொன்று தின்னாமை!

பா வகை: கலித்தாழிசை
(அ) கலியொத்தாழிசை




**பா வகை: மூன்றடுக்குக் கலித்தாழிசை:**

வேட்கை தனையும் விழைந்தே கடல்நீரை
ஆட்கொண் டிடவே விரும்பியே கொன்று தின்னலாமா?

மரக்கறி தவிர்த்தே மனமுவந்தே மாந்தர்
அரவம் விலங்கை விரும்பியே கொன்று தின்னலாமா?

ஆற றிவிருந்தும் அறம்நீக்கி மாக்களாய்
நாறும் கறிக்காய் விரும்பியே கொன்று தின்னலாமா?

**பா வகை: இடை மடக்கு நான்கடிக் கலியொத்தாழிசை:**




கொன்றே அறுத்துமே தின்றால் அறமில்லை;
நின்றே தொழுது நிலைப்பாய் மடநெஞ்சே!
நின்றே தொழுது நிலைப்பாய் கனிந்தவாறு;
என்றும் இரக்கம் இருக்க நினைப்பாய் மடநெஞ்சே!

**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா இனத்தைச் சேர்ந்த தாழிசை என்பதால் இது கலித்தாழிசை யானது. கலித்தாழிசை என்பதும், கலியொத்தாழிசை என்பதும் ஒன்றே என்று இலக்கண நூல் கூறுகிறது. இவ்வகை பாக்கள் இரண்டு இரண்டு அடிகளாலும் வரும் பலவடிகள் கொண்டும் வரும். ஆனால், ஒவ்வொரு பாட்டிலும் ஈற்றடியில் சீர் மிகுந்து வரும். ஒரு பொருள் மேல் மூன்றடுக்காய் அடுக்கி வரும். இடை மடக்கு நான்கடிக் கலியொத்தாழிசை பாடலில் வரும். ஈற்றடி இதிலும் சீர் மிகுந்து வரும் அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமைவது சிறப்பு. எதுகை தொடையும் வரலாம். சீர்கள் அமைத்தாலும் கலித்தளைக்குரிய நிரைசையில் வெண்டளைப் குரிய தளை அமைந்து வரும், இந்த இரண்டு வகை பாடல்களும் மேலே வந்துள்ளன.


நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : வெளிவிருத்தம்

விண்ணின் கருமேகம் விரைந்தே தூவிடும்- மழை
மண்ணுள் மரவேரும் மகிழ்ந்தே ஈர்த்திடும் -மழை
வண்ண நிறப்பூவும் வனப்பாய் பூத்திடும்- மழை
மண்ணில் செடிதனில் மயங்கித் தங்கிடும் -மழை.



கவிஞர் செ. கலைவாணி

# ஊக்கம் உயர்வைத் தரும்

உள்ளம் அதிலே ஊன்றும் விதையாய்
துள்ளி வருமோ துணையாய் ஊக்கமும்
அள்ளி எடுத்தே ஆக்கம் கொடுத்து
வெள்ளம் போலே விரைவாய் கடத்து



எதையும் அன்றே இனிதாய் தொடங்கு
முதலாய் உழைப்பை முழுமை ஆக்கு
கதைக்கும் ஊக்கம் கண்ணீர் துடைக்கும்
சிதைக்கும் வலியை சிறையும் வைக்கும்

உன்னை நம்பி உயர்வை செதுக்கு
தன்னால் பலனும் தகவாய் கிடைக்கும்
துன்ப நிலையிலும் துவளா திருந்தால்
இன்பம் அதுவும் ஈர்ப்பாய் அடையும்

ஒழுக்கம் பற்றி உளமாய் நடக்க
இழுக்கும் வருமோ இனியும் நமக்கே
அழுதால் வாழ்வும் அமைதி இழக்கும்
செழுமை வேண்டின் சிறப்பாய் உழைத்திடு

கவிஞர் பூர்ணிமா சங்கர்

# ஒழுக்கம் நாடு

ஒழுக்கம் உள்ளவரை
உலகம் மதிக்கும்.

விளக்கானது
வெளிச்சம் தருவது போல.

நற்குணங்கள் கொண்ட
மானிடன் உயர்வானவனே.

ஆதலால் அன்பானவனே
புனித்தை நாடு.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மாலைப் பேருந்து பயணம்



சாய்ந்த சூரியன் செந்நிறம் பூசி,
சாளரக் காற்றில் கனவுகள் தூசி.

சாலையின் தாளம் இசையாக முழங்கி,
சக்கரத் துடிப்பில் மனங்கள் தழுவி.

விளக்குகள் விழியில் நட்சத்திரம் போல,
விதியின் பக்கங்கள் திறந்த புத்தகம் போல.

புன்னகை சிலர் பகிர்ந்த கீதம்,
புயல்கொண்ட நாள் மறந்த சாந்தம்.

காற்றின் இசையில் கவிதை நுழைந்து,
கனவின் கதவுகள் மெதுவாய் திறந்து.

பயணம் முடியும் — ஆனால் உணர்ச்சி தங்கும்,
பேருந்தின் ஓட்டம் ஆனந்தம் தங்கும்.

கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# ஞான சூரியன்

வாழ்க்கையொரு வானம் என்றாய் நீதானே
வலம் வந்தோம் பறவைகளாய் உன்னால்தானே
பயமற்ற வானத்தை படைத்தவர் நீதானே
பறவைகளாய் பார் அளந்தோம் உன்னால்தானே

அறிவென்ற ஆயுதத்தை அளித்தவன் நீதானே
அவனியெல்லாம் ஆன்டாலும் அதுகூட உன்னால்தானே
ஆலமர விழுதாக அமைந்தவன் நீதானே
ஆகாயம் தொட்டுவிட்டேன் அதுவும் உன்னால்தானே

அன்பென்ற குடை பிடித்தாள் தாய்தானே
அறிவென்ற மழை பெய்தாய் அதுநீதானே
இன்சுவை தமிழ் தந்தாய் தேன்தானே
இருள்நீக்கும் வழிகாட்டி என்றும் நீதானே



உயரத்தை எட்டி விட்டோம் நாம்தானே
உயர்த்திவிட்ட ஏணி என்றும் நீதானே
வான் முட்டும் மரமானோம் நாம்தானே
வணங்குகின்றோம் உன் பொன்னடியை நிதம்தானே

கவிஞர் பொன் சுரேஷ், கழனிவாசல்

# காதலிக்கப்படு

காதலிக்கப்படுவதன் சுகம்
அறிவீரோ?
காதலிக்கப்படாமல்
யாராலும் நாமும்
காதலிக்கப்படுவோம் என
காத்திருந்தே தனிமையின்
நிழலில் வாழும் உயிரிடம்
ஒரு கணம்
அக்கறையாய் கேள்.
எத்துனை வடியுமென.
விழி வழி நீராய்.
சில வாக்கியங்கள்.
அதரங்களின் நடுக்கத்தின்
உளறலில் பல கதறல்களௌன.
காதலித்துப்பார் உலகம் அழகாய்
தெரியும்.



-வைரமுத்து

காதலிக்கப்பட்டு பார்
வாழ்வே மருந்தாய் மாறும்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# இளைப்பாறல்

நெடும்பயணத்தில் அங்கங்கே
இளைப்பாறல் புத்துணர்வு !
ஓடிக் களைக்கும் விலங்குகள்
இளைப்பாற நீர்நிலைகள் !

கடுமையான போர் நடுவே
இளைப்பாற போர்நிறுத்தம் !
பறந்து திரிந்த பறவைகள்
இளைப்பாற மரக்கிளைகள் !



தொடர் தோல்விகள் இளைப்பாற
முதல்வெற்றி !
வாழ்வின் இறுக்கங்கள் இளைப்பாற
மனைவியின் புன்னகை !

பொருளாதார நெருக்கடிகள்
இளைப்பாற மகனின் தேர்ச்சி !
தேர்தல் அரசியலார் இளைப்பாற
இடைத்தேர்தல் வெற்றி !

கடும் வெய்யிலில் இளைப்பாற
குளிர்பானங்கள் !
சுட்டெறிக்கும் கோடையில் இளைப்பாற
மலை வாசத்தலங்கள் !

மன உளைச்சல் இளைப்பாற
அன்னையர் காலடி !
அலைபாயும் மனங்கள் இளைப்பாற
தெய்வசந்நிதி !

முடிவினிலே மனித உயிர்கள்
இளைப்பாற இறைமை திருவடி !

கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# வறுமை வாழும் நிலம்

அந்தக னாட்சி அல்லல் நிழல்
அலறி ஒடுங்கும் ஆய்மக்கள்.
விசும்பு பொய்த்து வெம்ப
பெருகும் வறியோர் திரள்
வறுமை வாழும் நிலம்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# பாசமான உயிர்

ஆசையாய் கொஞ்சி
அன்பாய் வளர்த்த
என் எஜமானன்களுக்கெல்லாம்
நான் செல்ல பிள்ளை.

உப்பிட்டவரை உள்ளவரை நினைக்கிறேன்
தப்பு செய்தவரை துரத்தியும் கடிக்கிறேன்
வன்முறையில் நாட்டமில்லை
வாலாட்டும் மறந்ததில்லை.

ஒருவேளை சோத்துக்கு
உண்மையாய் உழைக்கிறேன்
நான் பட்ட கடனுக்கு
காவலும் காக்கிறேன்.

மிருக ஜாதியென்று
ஒதுக்கும் மனிதனே
உன்னை விட நம்பிக்கையில்
நான் ஒரு படி மேல்.

மிச்சத்தை உண்டு வாழ்ந்தும்
என் நிம்மதிக்கு பஞ்சமில்லை
நீதி நேர்மை படித்ததில்லை
நீதியோடு வாழ்ந்திட மறந்ததில்லை.

கலகம் எனக்கு தெரியாது
துரோகம் எனக்கு பழக்கமில்லை
ஏமாற்றுதல் எந்தன் வழக்கமில்லை
விசுவாசமே என் விருப்பம்.

காலத்திற்கு ஏற்ப
பேச்சை மாற்றும் மனிதா
நான் குறைக்கும் நாய்தான்
என்றும் என் எஜமானங்களுக்கு மட்டும்.



கடமைக்காக கண்ணீர்விடும்
கலியுக நாடகதாரிகளே
எங்களின் அழுகைக்கு ஈடேதும் இல்லை
என் எஜமான்களை மறந்ததில்லை.

இறந்துவிட்ட எஜமானுக்கு
இரங்கல் செய்த நாளுண்டு
பாடையில் போன அவர்க்கு
நான் பட்டினியாய் கிடந்த நாளுண்டு.

நடிக்க தெரியாத நாய்கள் நாங்கள்
நன்றியுள்ள ஜீவன்கள் நாங்கள்
வளர்த்தவருக்கு வாலாட்டி
வாழ்வை கழிக்கும் ஜீவன்கள் நாங்கள்.

மிருகமென்ற கேவலம் வேண்டாம்
மிஞ்சிவிட்டேன் உன்னை விசுவாசத்தில்
ஐந்தறிவு ஜீவன் நான்
ஆறறிவு உன்னை வென்று விட்டேன்.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# யதார்த்தம்



உறான் உப்புத்திண்டு
உற்றார் மறந்த கதையும் உண்டு
சுற்றம் பொருந்தக்கண்டு
உடுக்கை இழந்த கதையும் உண்டு
உளப்பாடு சீராயின்
உள்ளமோ உருகுமப்பா
உண்மை மறைக்கையிலே
உறவுகளும் விலகுமப்பா
கருமம் செழிக்கையிலே
கருமி நீங்குமப்பா
கருவூலம் ஜொலிக்கையிலே
எல்லாம் காலடியில் கிடக்குமப்பா
பேச்சுக்குறைகையிலே
பந்தமும் மறையுமப்பா
காசு களை தேடயிலே
கஞ்சல் கறைகளும்
நாடிவருமப்பா

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# வலியறிதல்

கொடுக்கும் அளவாய் கொள்கையில் உயர்ந்து
தொடுக்கும் வளத்தை தொகுக்கும் பண்பே
விடுத்த சிறப்பாய் விருந்தாய் பகிர்ந்தே
எடுக்கும் இதயமாய் என்றும் விடுக்குமே

கடனாய் பெற்று கருத்தில்லா வட்டியாய்
உடன்படா மனமும் உருகுமே வரும்நாளிலே
வெற்றுப் பேச்சிலே வெளுக்கும் சாயமே
சுற்றம் விலகும் சுகத்தின் நிறைவாய்

தூற்றும் உலகோர் தூரமாய் நின்றே
ஏற்றம் தடுக்குமே ஏற்றியோரை மறந்தே
இட்டோரை இழிக்கும் இழிகுண சிந்தையாய்
விட்டோர் உள்ளத்தை விழித்திருந்து பார்ப்பாரே



சொகுசான வாழ்க்கை சொர்க்கம் என்றெண்ணி
பகுக்கும் பண்பின்றி பாரிலே மறக்குமே
தூக்கம் மறந்து துயரை சேர்த்தே
ஏக்க சொத்துமே எளிதாய் உதவாதே

ஏமாற்றி சேர்த்த எத்தனை வளமும்
பூமாதேவியின் புகலிட புகையாய் மறையுமே
எளியோர் துயரை எளிதில் போக்கும்
துளியென சேர்க்கும் துவளாத மனதிலே

உறவுகள் உண்மையாய் உரிமையில் மகிழ்ந்தே
சிறக்கும் சிரிப்பிலே சிட்டாக பறந்தே
கடந்த சிந்தையும் கருத்தாய் வந்தே
தொடர்ந்து வந்திடுமே தொடர்பின் விருந்தாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# மோட்சமில்லை

நீர்மேல்
வைத்தப் புள்ளிகள்
தெளிவாய்த் தெரிகிறது
மனக்கண்ணில்.

தரையில் தெளித்த நீரில்
எத்தனை எத்தனை
அழகு ஓவியங்கள்.

வானத்திடல்
மேகமுந்தானையில்
அலையலையாய்
காற்றுஎழுதிய
கவிதைவரிகள்.

யாரின் கருணை
யாருக்கேனும் வழியட்டும்.
பெண்கள் இல்லா தேசத்தில்
பூக்கின்ற பூக்களுக்கு
என்றுமே மோட்சமில்லை.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உன்னை எண்ணியே வாழ்கிறேன்

கனவுலக நாயகியே
காதல் தேவதையே
உன்னையே நினைக்கிறேன்
உள்ளத்தில் உருகுகிறேன்

உரிமையாய் கேட்கிறேன்
உறவாகி வந்திடவே
ஆரணங்கின் எழிலில்
ஆனந்தம் அடைகிறேன்

தாளாத மயக்கத்தில்
தன்னிலை மறந்தேன்
இசைவாகி வந்துவிடு
இனிமைதனைத் தந்துவிடு

உன்னையே எண்ணியே
வாழ்கிறேன் கண்ணே
நலிகிறது தேகம்
நாணமானது மோகம்



இளந்தென்றல் காற்றாய்
இதமாய்த் தழுவிடு
வசந்தமாய் வந்திடுவாயே
வாழ்வில் கலந்திடவே

வஞ்சியின் கொஞ்சலில்
வாலிபமும் ஊஞ்சலாகட்டுமே
ஏந்திழையின் பார்வையில்
ஏக்கமது தீர்ந்திடுமே

எண்ணங்கள் ஒன்றிணைந்திட
வண்ணமாய் மாறட்டுமே
மனதின் ஓசைகள்
மௌனத்தின் மொழியாகட்டுமே

பூக்கின்ற பூவெல்லாம்
பூவையுன்னை நினைவூட்டுகிறதே
காதலும் கனிவாகிட
காலமெல்லாம் இன்பமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சமயபுரம் மாரியம்மன்

சமயபுரம் மாரியம்மன்
சிவந்த திருமேனி காட்சி தருபவள்!
கஷ்டத்தில் இருக்கும் போது!
சமயத்தில் உதவ வருபவளே!
உன்னை பார்த்தவுடன் தேகம் சிலிர்க்கிறது!
சமயபுர மாரியம்மன் ஊர் மக்களை காக்க
ஒரு மண்டலம் பச்சை பட்டினி விரதம் இருக்கிறாள்!
பூச்சாட்டுதல் வண்ண மலர்களுடன்
அம்மனை பார்க்கும் போது
மனம் அமைதியாக இருக்கிறது!
அக்னி சட்டி எடுத்து ஆலயத்தை
சுற்றி வரும் பக்தர்களுக்கு
நினைத்த காரியத்தை நடத்திக் காட்டும்
மகா சக்தியானவள்!
சமயபுர கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு
எண்ணியுடன் வேண்டிய
வரத்தை தரும் சக்தியானவள்!
ஆடி மாதத்தில் ஆலயங்களில்
அபிஷேகம் முடிந்தவுடன்
அலங்காரத்தில் கம்பீரமாக வீற்றிருக்கிறாள்!
மாவிளக்கில் பசு நெய் ஊற்றி திரி போட்டு
ஜோதி வடிவில் அன்னை அருள் பாலிக்கிறாள்!
எலுமிச்சையால் மாலை தொடுத்து
எலுமிச்சை மாலை அம்மனுக்கு சாற்றும்போது
திருமணத்தடை நீக்குவாள்!
திருவிழாவில் சமயபுரம் மாரியம்மன்
திருத்தேரில் பவனி வருகிறாள்!
சமயபுரம் மாரியம்மன் ஆயிரம் கண்ணுடையவள்!
அம்மனைப் பார்த்துக் கொண்டு
இருக்கணும் போல மனம் ஏங்கும்!
பெண்ணின் பாதுகாப்பு குங்குமம்
பெண்கள் நெற்றியில் குங்குமம் வைக்கும் போது
தீவினைகள் அகலும்!
சமயபுர மாரியம்மன் அம்மனை
வேண்டிக் கொண்டால்
குழந்தை பாக்கியத்தை நிறைவேற்றித் தருவாள்!
திருமணத்தடை நீங்கும்
தீராத நோய்களை தீர்த்து
வைக்கும் அன்னையாவள்!
சமயபுரம் மாரியம்மன் காலடியில் சரணடையுங்கள்!
கலியுகத்தில் கண்கண்ட மகா சக்தியானவள்!



கவிஞர் மா. நந்தினி, சேலம்


# மந்திரக்கோல்



நினைத்ததை மாற்றிக் கொள்ள
இறைவன் கொடுத்தான்
ஒரு மந்திரக்கோல்!
துள்ளலோடு பெற்றுக் கொண்டேன்!
நீதியை மாற்றினால் அனைத்தும்
நலமாகும் என்று நினைத்தேன்!
இலவசங்களை அள்ளி இறைத்தால்
ஈயென்று பல்லைக் காட்டி
வாலாட்டும் மக்களை நாயாய்!
வாய்ஜாலம் காட்டும் வெட்டி
அரசியல்வாதியின் ஆர்பாட்டத்தில்
மயங்கி விலைமதிப்பில்லா ஓட்டை
விற்கும் வீணர்களை நரியாய்!
காசு கொடுப்பவரிடமெல்லாம்
கையை நீட்டும் கையாலாகாதவனைக் குரங்காய்!
பூடகமாய் மக்களை ஏமாற்றும்
கபடதாரிகளை கழுதைகளாய்
மாற்றிக் களை எடுக்க!
சிறுப்பிள்ளையைக் கூட விட்டு
வைக்காத காமக்கொடூரன்களை
உயிரோடு வவ்வாலாய் கட்டித்
தலைகீழாய் தொங்கவிட!
தர்மதேவதை கண் திறந்து
வாய்விட்டுச் சிரிக்க!
மனம் நிறைந்த சந்தோஷத்தில்
நான் இருக்க!
இன்னும் என்ன உறக்கமென
அம்மாவின் குரல் கேட்க!
கனவு தான் என்றாலும்
நிஜத்திலே நடந்திட்டால்
ஏக்கமாய் இருக்குதே!
மந்திரக்கோல் என் கை
நழுவிப் போயிற்றே!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# எந்தன் வரிகள்



வெள்ளை காகிதத்தில்
கிறுக்கப்படும் எனது
கிறுக்கல்கள்

பேனா முனையில்
பிரசவம் ஆகும் எனது
வரிகள்

எண்ணங்களின் ஊர்வலத்தில்
நடை பயிலும் எனது
எழுத்துக்கள்

கவிஞன் என்னும்
கற்பனையில் நான் புனையும்
வாக்கியங்கள்

எனது சிந்தனையில் உதிக்கும்
சொற்களின் குப்பைகள்
எல்லாம் இங்கே

கவிதை வரிகள் என
பெயர் சூட்டப்பட்டு காகிதத்தின்
மேனியில் கறைகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# இல்வாழ்க்கை



அறநிலைகளில் மூவர்க்கும் ஒழுக்க நெறியோடு துணை நிற்பானே
அகவாழ்வால் இணைந்த இல்லறத்தில் சிறந்திருப்போனே

துறவி, ஏழை, ஆதரவிலிகளுக்கு உதவுவானே
ஆற்றோர பனை போல் தோள் கொடுப்பவனே

ஐம்புல மாந்தர் ஐவருக்கும் செய்தலே
ஐவகை நிலத்திலும் தலையாய கடனே

பழிக்கு அஞ்சல் பகுத்துண்ணல் உடையவனின் சந்ததி
வழிபட வேண்டிய இறைவனின் சன்னதி

அன்பும் அறமும் கொண்ட தலைவன் தலைவியின் இல்வாழ்வு
பண்பும் பயனும் நிறைந்த நல்வாழ்வே

அறவழியில் இல்வாழ்வு நடத்துவான் என்றும்
பிறவழியில் பயன்பெறல் வேண்டற்பாற்று

இம்மை இல்வாழ்வில் நல்முறை ஒழுகுவான் என்றும்
மும்மையிலும் இன்பம் நாடிச் செலான்

தவஞ்செய்து அவ்வழியில் ஒழுகித் தவறான் வாழ்வு
தவத்தை விடவும் மேன்மையதே

அறம் என்பதே நல்ல இல்வாழ்க்கை ஆகுமே
பிறர் பழிப்பது இல்லாயின் அதுவே தகுமே

.வாழ வேண்டிய முறைப்படி வாழ்வை விதித்துக் கொண்டவரே
தாழ்வின்றி தேவருக்கு ஒப்ப மதிக்கப்படுவரே

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# தென்றல் காணுமா விழிகள்!



மலர்களின் இதழோடு இதழ் ஒருங்கிணைய
பூத்திருக்கும் பூக்கோலம் அழகோ!
பூவை மனம் கல்லாக பூக்கள்
மணம் வீசி ஆதாயமென்னவோ!

நீ பார்க்க விழித்த விழிகள்
நீயில்லாது பயன் என்னவோ!
வாசல் வந்த தென்றல்
வளைந்து சென்றதேனோ

வாயிற்கதவு திறக்கவில்லையோ
தென்றல் தீண்ட மனமில்லையோ
இதுவும் ஓர் தீண்டாமையல்லவோ!
வடுவாக கற்றாழையில் விழுந்த கோடாக

உன்னைக் கீழாக்கி சென்றதேனோ!
கணப்பொழுதில் உழன்ற நாவு
உடைத்து சென்றதேனோ
தெரிந்தே தெரியாமல் கூறியதென்னவோ

புரிந்தே புரியாது பிதற்றியதென்னவோ
தான் என்ற கர்வமோ!
எதற்கும் ஆகாத சாரமில்லா உப்பாக
என்னை கீழாக்கி தள்ளியதேனோ!

ஓராயிரம் ஆண்டல்ல ஒருநூறு ஆண்டுமல்ல
வாழும் பொழுதுகள் சிறிதல்லவோ
எத்தனை நெருடல்கள்
எத்தனை வியாகுலங்கள்

இத்தனையும் இல்லாது இனிதே
வாழ பிரயாசப்பட வேண்டுமல்லவா
இம்மண்ணில் உள்ளளவும்!
வாழ்நாளை கூட்டும் மகிழ்வும் மனத்தாழ்மையும்

உள்மன சமாதானமும் பெருகனுமே நம்மில்!
தென்றல் தீண்ட விழிகள் மலரட்டும்!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# தந்தையின் அன்பு

நான் காணாத உலகத்தை
என் மகள் காண வேண்டும்
என்ற எண்ணத்தில் ஒவ்வொரு
செயலும் செய்தவர் என் அப்பா
பிறப்பு முதல் திருமணம் வரை
நடக்க தெரியாத காலத்தில்
உன் ஒத்த விரலை பிடித்து
நடக்க கற்றுக் கொண்டேன்
இனிமேலும் உன்னுடனே இருப்பேன்
உன் நிழலை பின் தொடர விரும்புகிறேன்
நீ என் மீது வைத்து இருக்கும்
அந்த பாசத்தினை உணர்வுகளால்
வெளிப்படுத்த என்னிடம் மொழி ஏதும் இல்லை
உன் கோபத்தில் மறைந்திருக்கும் உண்மையான
அன்பு இருப்பதை கண் இமையில் கண்டேன்
என்னை பற்றி நினைத்து மகிழும்
அளவில் பெரிதாக உயர்வேன்
என் அன்புள்ள அப்பாவுக்கு மகள் எழுதுவது.



கவிஞர் மோனிஷா

# அவன் வருவானா?

அவன் வருவானா?
வருவானா; வரமாட்டானா?
எவன் வருவானெனவே
வந்திருந்தேன் நான்.


காலை மாறி
மதியம் தேய்ந்து
மாலை ஆயிற்று.

நான் வந்ததே வீண்!
விரயம் என் நினைக்கையில்,
கண்ணீர் நீர் குளம் கட்டியது.

கிளம்ப முடிவெடுத்து
எழுகையில்
தோளைத் தழுவிய
கை பிணைப்பில்
அவனை உணர்ந்தேன்;
மனத்தில்.

'என்னடா! அதற்குள் கிளம்பிவிட்டாய்?'

எளிதான உரையாடலில்
இரு வருட வருத்தம் கரைய;
மனமெல்லாம் பூத்தது மத்தாப்பு.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# கனவுநிலை உரைத்தல்

அதிகாரம் : 122



என் காதலனின்
தூது கொணர்ந்த.
இக்கனவிற்கு நான்
என்னவிருந்து கொடுப்பதோ?

என்வேண்டலுக்கு இரங்கி
விழிகள் உறங்கினால்.
நான் தப்பிப்பிழைத்திருப்பதை
கனவின்வழி அவனுக்குரைப்பேனே.

நேரில் இன்பம்நல்கா
என்னவனை நான்.
கனவில் காணுதலால்
என்னுயிர் நிலைத்திருக்கிறதே.

நனவில்வாரா என்னவனை
கனவில் காண்பதாலேயே.
தினமும் எனக்கு
இன்பம் உண்டாகிறதே.

கனவிலும் சரி
நனவிலும் சரி.
என்னவனால் நானடையும்
இன்பமது ஒரேயளவினதே.

நினைவு என்றவொன்று
இல்லையாகில் கனவொன்றின்.
நிலையில்வரும் காதலன்
எனைவிட்டுப் பிரியாரே.

நனவில் வந்தெனக்கு
அன்பு காட்டாதவன்.
கனவில் வந்தென்னை
துன்புறுத்துவதும் ஏனோ?

நான் தூங்குகையில்
என் தோள்மீதும்
விழித்தெழுகையில் மார்மீதும்
இருக்கின்றான் என்னவனே.

காதலனில்லா காரணத்தால்
கனவின்பம் காணாமகளிர்.
நனவில்வாரா என்னவனை
அன்பிலாதான் எனப்பழிப்பரே.

என்னவன் என்கனவில்
வருவதறியா இவ்வூரார்.
நனவில் வரவில்லையென
அவனை பழிக்கின்றனரே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பெருங்கொடுமை

யாசகத்தை விடவும்
படு மோசமானது,
பெருங்கொடுமையானது,
பெற்ற பிள்ளைகளிடம் கையேந்துவது.

பிள்ளைகளும் பிரியத்துடன்
'பாக்கெட் மணி' தரலாம்
பெற்றவர்க்கு.
பால்யத்தில்
அவர்களுங்களைப்
போஷித்தது போன்று!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நான் என்பவள்

நான் என்பது சுதந்திரமற்ற பறவை
கனவுகளை நிறைவேற்ற துடிக்கும்
உன்னத உணர்வு
ஆசைகளை வெளிப்படுத்த முடியாத படைப்பு
நான் திசை மாறிய பறவை
கவலை சந்தோஷம் வெற்றி தோல்வி சூழ்ந்த தீவு
அன்பை கொடுத்து ஏமாந்த ஏமாளி

நேசிக்கப்பட்டவர்களால் நொந்து போன ஒரு பிணம்
அறியாத பலவற்றை அறியத் துடிக்கும்
அற்புதமான ஒளி விளக்கு
சாதனை படைக்க திறமைக்கான
களங்களைத் தேடி அலையும் வண்ணாத்தி
வார்த்தைகளை எழுத்துக்களாக
தடம் பதிக்க உருவெடுத்த கவிதை

இனமத மொழி கலப்படமற்ற
உன்னத உறவினை கண்ட தேவதை நான்
எத்தனை பேருக்கு வழி சொன்னாலும்
எனக்கான பாதையை மறந்து துடிக்கும்
வழிப்போக்கன் நான்

தோள் கொடுக்கும் தோழமைகள்
என்னை சூழ நான் அதிர்ஷ்டமானவள்
உழைப்பின் பெரும்பேற்றை
பெருமையாக காண துடிக்கும் உன்னத சக்தி
தன் குழந்தை மட்டுமல்லாது பிறர் குழந்தையும்
தான் போன்று காக்க துடிக்கும் தாயுமானவள் நான்
ஈரம் எல்லாம் நெஞ்சத்தோரையும்
தாங்கி வாழும் இதயம் கொண்டவள்
நான் என்பது விடை தெரியாத வினாவாகும்

வாடாத மல்லிகை என்றும்
என்னில் புன்னகை காணுகின்றேன் என்று கூற ஆசைதான்
வாழ்வில் உண்மையான ஆனந்தத்தை
எதிர்பார்க்கும் குழந்தையும் நான்.
நான் நானாக இருக்கின்றேன் எப்போதும்
எனக்கான விடியலை காணும் வரை



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி, அக்குறணை

# மழையிரவால் குளிர்ந்த நிலம்

பகல் முழுவதும் குடை விரித்த
சூரியப் பந்தல் சுருட்டப்பட்டதும்
பன்னீர் தெளிக்கிறது தூறல்மழை!

வேங்கையிடம் அகப்பட்ட
புள்ளிமானின் வேகத்தில்
வெளுக்கிறது ஐப்பசி மழை!

சூரிய ஒத்தடத்தில்
நிலம் வாங்கிய சூடு
புள்ளினங்களின் சிறகசைப்போடு
வான் நோக்கி எழுகிறது!

மழையின் நடனத்தில்
முகிழ்ந்த மனோரஞ்சிதமாய்
மண்ணின் வாசம்
காற்றில் பரவிய கணத்தில்
கார்கால மயில் தோகை விரித்து
கொண்டாடித்தீர்க்கிறது.
மழையிரவினை!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# கருப்பு பிண்டம்

நல்ல நாள் அதுவுமா
கருப்பு நிற ஆடை
வேண்டாம்
அப்படியா
இந்த கருப்பு தோல் உடம்பை
என்ன செய்ய



கவிஞர் அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# கனவினில் விரியும் படமென

நிசப்தத்தில் நீளும் குகைக்குள்
மெல்லிய அரையிருட்டு வெளிச்சத்தில்
எங்கே எந்நிலையில்
உலவுமென்ற பயப்பரவசத்தில்
நகரும் காலடித்தடங்களுக்குள்
ஊடாடி படம் விரித்தபடி விழிகளுக்குள்
நம்மைப் படம் பிடிக்க
கண்ணாடிக் கூண்டுக்குள் காத்திருக்கும்
பிளவுறும் நாவைக் கண்டும்
பளபள மேனியின்
திட்டுக்களால் ஆன நிறங்கள் கண்டும்
நகர்ந்தும் நீண்டும்
நம்மை நோக்கும் விழிகள் கண்டும்
உறக்கத்தைத் திருடியபடி
கனவில் விரியும் என்ற அச்சத்தில்
கண்ணுற்றபடி கடக்கிறோம்
அரவங்களை அருங்காட்சியகங்களில்.



கவிஞர் இளையவன் சிவா

# பிரிவின் வலியில்



இதயத்தை ஆட்டிப்படைக்கும்
வேதனையை மறைக்க
புன்னகையை அணிந்தாலும்
கண்கள் கண்ணீரால் பேசுகின்றன
துயரத்தின் மொழியை.

என் சொற்களை
ஒருமுறை கூட கேட்காமல்,
தாங்களாகவே முடிவெடுத்து விடுகின்றனர்.

புரிய வைப்பதற்காய்
சற்றே சத்தமாய் பேசி விட்டால்
அதற்கே ஆயிரம் பெயர் சூட்டிவிடுகின்றனர்.

பேசத் துடிக்கும் என் இதழ்கள்
சுவற்றில் மோதி, காற்றில் கரைந்தன.

என் எண்ணங்கள்
அவர்கள் போட்ட அணையினால்
மனதுக்குள் பூட்டப்பட்டன.

நிஜம் நிறைந்த என் அன்பு
அவர்களின் விழிகளில் தவறாகவே தெரிந்தது

காலம் உருண்டோடி,
இயல்பை ஏற்று நடக்க கற்றுக் கொண்டேன்.


உடைந்த என் மனதை முழுதாய்
தன் வசப்படுத்த ஒரு இதயம் முன்வந்தது.

என் மௌனத்தின் சத்தத்தையும்
விழிகள் வடிக்கும் கண்ணீரின் அர்த்தத்தையும்
நான் கூறாமலே உணர்ந்து கொண்டது.

அவ்விதயத்தின் பொன்னான குணமே
என் உலகத்தை புதுப்பித்தது.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை, கண்டி (இலங்கை)

# தெய்வீக நட்பு



நட்பு என்னும் ஓர் உறவு
அது உயிரிலும் மேலானது.

உண்மை நட்பு என்றுமே குணம் மாறுவதில்லையே
பெருமையின் உச்சமாய் பேராண்மையின் வடிவமாய்
தோள் கொடுத்து நிற்குமே துயரத்தை கலைந்திடுமே.
நட்பு என்னும் ஓர் உறவு அது உயிரிலும் மேலானது.

உறவெனும் சங்கிலியில் சிக்காத அதிசயம்தான்
உணர்வோடும் உயிரோடும் கலந்திட்ட நட்புதான்
உறவுக்கு மேலான உயிரான நட்புதான்
உயர்வு கண்டு பெருமை கொள்ளும் தெய்வீக நட்புதான்
நட்பு என்னும் ஓர் உறவு அது உயிரிலும் மேலானது

ஏமாற்றம் எதிர்பார்ப்பு நட்பிடம் கிடையாது
நேர்மறை சிந்தனை நேர்மையான எண்ணம்
உயிரான நட்புக்கு ஒலி கொடுக்கும் உண்மையே
நட்பு என்னும் ஓர் உறவு அது உயிரிலும் மேலானது


அன்பு நட்பு பாசமும் அரவணைக்கும் குணமும்
நட்புக்கே சாத்தியம்
நட்பு என்னும் ஓர் உறவு அது உயிரிலும் மேலானது

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# நிலை

அலைப் பேசியில்
பிறரின்
இணையம் நிலையைக்கண்டு
எனக்கு நானே
ஆறுதல் அடைகிறேன்.

என் நிலையில்தான்
எல்லோரும் என்று !




கவிஞர் அ. சேவியர், கடலூர்

# உன் நெற்றி பொட்டு முதல்



உன் நெற்றி பொட்டு முதல்
உன் பாதம் தாங்கி வரை
தினமும் நீ பயன்படுத்தும்
உயிரற்ற அனைத்தும்
உன் பூவிரல் பட்டதும்
அனைத்தும் உயிர் பெற்று
இந்த பூமியில் தான்
பிறந்ததன் பிறவி பயனை அடைந்தது

கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# மாற்றம்

சில்லறையை
சரிபார்த்து
நாளாகிறது
அலைபேசி
பணம் கட்ட
துவங்கியதிலிருந்து

சிந்தனையை
செலவழித்து
நாளாகிறது
கேள்விகளுக்கு
விரல் சொடுக்கும் நேரத்தில்
இயந்திரங்கள்
பதிலளிக்க
துவங்கியதிலிருந்து



மாறிவிட்ட
மாற்றங்களில்
நன்மைகளும்
தீமைகளும்
எடை போட்டு
நாளாகிறது
இயந்திரமாய்
கால்கள்
நடை போட
துவங்கியதிலிருந்து

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# முதுமை

வாழ்க்கை முழுதும்
வாழ்வாதாரத்திற்காக ஓடியே
காலம் கடந்து தான் போனதே!
வாரிசுகளை கரை ஏற்றவும்,
சொந்த பந்தங்களை திருப்தி படுத்தவும்,
தனக்கென்று சேமிக்காமல்
உறவுகளால் தொலைந்தும் தான் போனதே!
இறுதிக்காலம் முதியோர் இல்லத்திலே !
அனுபவிக்கும் இளமை காலங்களில்
சிக்கனம், சேமிப்பு என்று
வாழ்க்கையை தொலைந்தும் தான் போனதே !
உனக்கு நான், எனக்கு நீ என்றே
அன்பையும், தள்ளாமையும், நோயையும் பகிர்ந்தும்
காலங்கள் கடந்தும் போயிற்றே!
முதுமை அனுபவங்கள் நிறைந்த நிறைகுடம் தானே!
இளம் தலைமுறையினர்
முதுமை உடையவர்களை உதாசீனப்படுத்தியும் ,
கேலியும் கிண்டலமாகவே பார்க்கப்படுகிறார்களே!
பழுத்த ஓலையைக் கண்டு குருத்து ஓலை சிரித்ததாம்.
இது ஒரு பழமொழி புது மொழியும் கூட
இருக்கும் வரை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து
பிரச்சினைகளை பகிர்ந்தும் வாழ்வோமே!
மனிதப் பிறவியை எடுத்த நாம் மகோன்னதம் புரிந்தே
இன்னல்களைக் கடந்தே
அமைதி, இன்பம் அடைந்தே
உன்னத நிலையை அடைவோமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காயப்படுத்தவும் காரணங்கள் வேண்டுமே

உடைந்து சிதறுவது
எனக்கொன்றும் புதிதல்ல
மீண்டு(ம்) சிரிக்கவும் தெரியும்

காயப்படுத்துபவர்களுக்கு
அன்பான வேண்டுகோள்
காரணம் கொண்டு காயப்படுத்துங்கள்
கற்றுணர்ந்து கொள்கிறேன்
தவறியும்
தவறிழைக்காமல் இருந்துவிடுகிறேன்.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# கடுதாசி நாட்கள்

கடந்து போன நாட்கள்
நினைவிலே கொஞ்சும்
கவிதையாய்

ஆழ்ந்த யோசித்து
எழுதுவில்லை அன்று
அன்பை தந்திடும் ஆவலும்
அங்கே

வார்த்தைகளில் நலம்
கோர்த்துப் பதிலுக்கு
நலம் கேட்டு

திருவிழாக்களுக்கு அழைப்பும்
விடுமுறைக்கு அழைப்பும்
சொந்தங்கள் விசாரிப்பில்
உரிமையும் கடுமையும்

கடுதாசி கடத்தி வந்த
வார்த்தை ஜாலங்கள்
கடத்திப் போன பதில்
கோலங்கள்

கடிதமலர்கள்
வாசித்துவுடன் பரவசம்
சற்றே கோபம்
சற்றே இயலாமை
ஆனாலும் அன்பின் மணம்
மாறாத நாட்கள்

அன்று மலர்ந்த
கடித மலர்களின் மணம்
இன்றும் இதமான வருடலில்

நேசங்கள் பொங்கிய
கோபங்கள் கரைந்த கரைத்த
அந்த கடுதாசி கவிதைகள்
எங்கோ மறைந்தன

மீண்டும் ஒரு தேடலுக்குள்
நம்மை நகர்த்தும் ஆவல்
கொண்ட நாட்கள்




டிங் டிங் ஒலியின் சினுங்கலில்
பரபரப்பாய் வாசல் வந்த
நாட்களின் நினைவில்.

இருசக்கர வாகனமும்
காக்கி உடையும் கலந்த
அந்த காலை நேரத் தென்றல்
ஆசையுடன் தழுவிடும்

கடந்து போன கவிதைதானே
கடித மலர்கள்
மீண்டும் மலருமா நினைவில்
மட்டும் நிஜமாகிய
அழகு கவிதை நாட்கள்
கடுதாசி நாட்கள்.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# பலூன்காரர்

வாங்க வாங்க கண்ணுகளா
பலூன் வாங்கத்தான்
ஓடி வாங்க கண்ணுகளா!

காலங்காத்தால எந்திருச்சு
பலூனிலும் காத்தடிச்சு
கால் நோக மிதிவண்டிய
மிதிச்சுக்கிட்டு வந்தேனுங்க!

பச்சைத் தண்ணியை
மொண்டு குடிச்சுட்டு
பலூனை பக்குவமா கொண்டாந்தனுங்க!
நெதமும் மூச்சுப் பயிற்சி செஞ்சா
நல்லதுன்னு பக்குவமா சொல்றாங்க!

ஊதாத பலூனும் ஊதா வண்ணத்துல
வெச்சிருக்கேன் வாங்கி ஊதுங்க கண்ணுகளா!
அடிச்சு அடிச்சு விளையாட ஊதின பலூனும்
வண்ண வண்ணமாக வெச்சிருக்கேன்
வாங்கி விளையாடுங்க கண்ணுகளா!

ஆளுக்கொரு பலூனத்தான் நீங்களும் வாங்கிட்டா
வெரசாத்தான் போவனுங்க வீட்டுக்கு!
போற வழியில தான் கெடச்ச காசுக்கு
அரிசி வாங்கிட்டுப் போனா என்ற ஊட்டு மகராசி

எங்களுக்கு கஞ்சி வெச்சு ஊத்துவா
எம் புள்ள குட்டி வயிறு நெறையும் எஞ்சாமிகளா!
உங்க புண்ணியத்துல எங்க வயிறும்
மனசும் குளிர்ந்து போகட்டும் செல்லங்களா!

வாங்க வாங்க கண்ணுகளா
பலூன் வாங்கிடத்தான் ஓடி வாங்க கண்ணுகளா!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## (உலக தற்கொலை தடுப்பு தினத்திற்கான கவிதை)

அன்றாடம் செய்திகளில் அதிகரிக்கும் தற்கொலைகள்!
எண்ணற்ற காரணங்கள் ! மீளாத கடன் தொல்லை
தாளாத அவமானம், ஈடேறாக் காதல்,
தீராத நோய்கள், ஓயாத பணிச்சுமைகள்,
நேர்மறைச் சிந்தனைகள் நெஞ்சில் குறைவதனால்
விரைந்து வளர்கிறதே வீழ்தலுக்கான எண்ணங்கள்!.
அரவணைக்க யாருமின்றி பாரமான மனங்கள்தாம்
தனிமையை நாடி தற்கொலைக்கு முயன்றிடுதே!
படித்தவர், பாமரர் விலக்கல்ல தற்கொலைக்கு!
ஏற்றத் தாழ்வுகளை ஏற்கின்ற மனமிருந்தால்
தற்கொலை எண்ணத்தை தவிர்த்திடலாம்!
குற்றம் குறைகளைப் பொருத்தருளும் மனம்வேண்டும்!
பாரங்களைப் பகிர்ந்திடுவோம்! உரையாடல் உளவியல்
மாற்றங்களை விளைவிக்கும்!அரவணைக்கும் உறவுகளும்
உறுதுணையாய் நட்புகளும் அமைந்தவர்க்கு எந்நாளும்
வாழ்வு ஒருவரமாகும்! வாழநினைத்தால் வாழலாம்!
வழிகளுண்டு இப்புவியில்! நிறைவுபெறாத பக்கங்கள்
நிறைய உண்டு வாழ்வினிலே! அன்புக் கரங்களின்
நீட்சியிலே வரங்கள் பெருகிட வாழ்வினிக்கும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# குட்டி தேவதையின் புன்னகை



எப்போதெல்லாம்
அந்த சாலை சிக்னலில்
சிவப்பு விளக்கால்
நிறுத்தப்படுகிறேனோ
அப்போதெல்லாம்
இனம் புரியாத
சிலிர்ப்பில்
மூழ்கித்தான் போகிறது மனசு
அப்படித்தான்
அன்றொரு நாளில்
அதே நிறுத்தத்தில்
எனதருகே
இரண்டு சக்கர வாகனத்தில்
பின்னிருக்கையில்
அம்மாவின் தோளிலிருந்து
அன்றலர்ந்த பூவாய்
தூக்கம் கலைத்து
மெல்லிய புன்னகையை
உதிர்த்து விட்டு
மீண்டும் உறங்கிப்போனாள்
ஒரு குட்டி தேவதை
இன்றும்
அந்த அழகிய புன்னகை
அந்த சாலை சிக்னலில்
குழந்தைமணம் மாறாமல்
அப்படியே
உயிர்ப்போடு தான் இருக்கிறது

கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

## என்னதான்

தெளிவான திட்டம்
மனப்பூர்வமான
சிறப்பான செயல்பாடு
புதியவை அறியும் ஆர்வம்
எதிர்வரவற்றை யூகிக்கும் திறமை
இணைந்து பணிபுரிபவர்களை
ஊக்கப்படுத்தும் ஆற்றல்

காரியம் கருதி
காலம் பார்க்கா உழைப்பு
சூழ்நிலைக்கேற்ப
மாற்றிக்கொள்ளும்
அணுகுமுறை

என்னதான் இத்தனையும்
செய்பணியில்
தன்னிடம் இருப்பதாய்
உணர்ந்தாலும்
ஒரு எதிர்மறை விமர்சனம்
முகச்சுளிப்பு கடுஞ்சொல்
ஏளனப்பேச்சு அவமானம்
காட்டுக்கத்தல்
ஒட்டுமொத்த நம்பிக்கையும்
உள்ளுணர்வையும்
தகர்த்துவிடுகிறதே.
****



## ஆதலினால்

சிக்கல்களையும்
பின்னடைவையும்
விவாதிக்கையில்
தன்தரப்பு விளக்கத்தை
சொல்கையில் 'போதும்'
நான் காரணமில்லை என
தற்காத்துகொள்கிறாயா என்றவர்
பின்னொரு நிகழ்வில் இதை மாதிரி
தன்நிலை விளக்கம் கொடுக்கையில்
நீங்களும்தானே உள்ளத்திலிருந்து
புறப்பட்ட வார்த்தைகள்
வாயிலிருந்து வெளிவரவில்லை
நமக்கும் அவர்க்கும்
வித்தியாசமில்லையா
என்ற முதிர்ச்சியாலும்
வலுவானவராயும்
அதிகாரத்தாலும்
செல்வாக்காலும்
ஆதிக்கம் செலுத்துபவராய்
இருப்பதாலும்

அவருக்கும் புரிந்திருக்கும்
என்ற உள்ளுணர்வாலும்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

பாசி படிந்த கல்லை
தேய்த்து கழுவினால்
பார்க்க சகிக்கவில்லை
***

பூப்பந்து
புட்டம்
குழந்தைக்கு
***

திருப்பதி
திருப்தி
தரிசனம்
***

தண்ணீரில் மான்
தரையில் மீன்
வேற்று கிரகம்
***

பணம் வெறும் பொருள் என்பது
வங்கிகளில் கட்டு கட்டாக கட்டி
வீசப்படும் போது புரிகிறது
***

எழுத்து பிழையும்
கவிதையாக வாய்ப்புள்ளது
எழுது
***

கைதி,
கை "தீ"
பெண்
விளக்கேற்றுகிறாள்
***



நான் பார்க்கும் போது மட்டும்
துடிக்கிறது போலும்
கடிகார முள்
***

நீ பிறந்த காலம்
அடுத்த நொடியே இறந்த காலம்
ஆனது தான் காலத்தின் மகிமை
***

காபி கொட்டை
காதல் மணம்
அவளுடனான இறந்த காலம்

465
மகன் இகழ் தந்தைகள்
மகள் புகழ் தந்தைகள்
எங்கேயும் எப்போதும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

எய்ம்ஸ்மருத்துவ மனையில் அவனுக்குத் தெரிந்த மருத்துவர் இருந்ததால் உடனடியாக ஐ.சி.யு.வில் சேர்த்து குளுக்கோஸ் ஏற்றச் சொல்லிவிட்டு "டாக்டர் என்னாச்சு'' என்று பதறினான்.



"கொஞ்சம் பொறுமையாக இருங்கள், அரசு. உங்கள் அம்மாவிற்கு ஒன்றுமில்லை. அவர்கள் சாப்பிடாமல் இருந்திருக்கிறார்கள். வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை." என்றார் டாக்டர் குணா.

வெளியே வந்த போது அப்பாவும் பாபுவும் பேசிக் கொண்டிருக்க, திலக், பூனம், அனாமிகா மூவரும் வேகமாக வந்து "அரசு, அம்மாவிற்கு என்னாச்சு? என்ன பிரச்சினை" என்று கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை. சரியாக சாப்பிடாததனாலே வந்த மயக்கம்தான்."

அனாமிகா "இதுக்குத்தான் சொன்னேன் ஒழுங்காக வீட்டிற்குப் போய் அம்மாவைக் கவனி" என்று கத்தினாள்.

எல்லோரும், ஜே.கே. பாபு மற்றும் அங்கிருந்த அனைவரும் திரும்பிப் பார்க்க மெதுவாக பூனத்தின் பின் மறைந்து கொண்டாள்அனாமிகா.
டாக்டர் குணா வந்து, "அரசு பிரச்சினை ஒன்றுமில்லை. அம்மா ஒழுங்காகச் சாப்பிட வில்லை என்று நினைக்கிறேன். குளுக்கோஸ் போட சொல்லி இருக்கிறேன். போய்ப் பாருங்கள்" என்றார்.

வேகமாக உள்ளே வந்த அரசு அம்மா விழித்திருப்பதைப் பார்த்து "என்னாச்சும்மா? என்றான் கதறி அழுதுகொண்டே.

கையைக் காட்டி அருகில் அழைத்து அவனை அப்படியே ஆரத்தழுவிக் கொண்ட ராணி அம்மா "எப்படிப்பா இருக்கே?" என்றாள்.

"எனக்கென்ன குறைச்சல். கல்லு மாதிரி இருக்கேன். நீங்க.... நீங்க... " அரசினால் அழுகையை அடக்க முடியவில்லை.

"அழாதே கண்ணா. இப்போ என்னைப் பார்த்து அழுகிறாய். உன்னைக் காணாமல் தினம் தினம் அழுதேன் தெரியுமா?" என்றாள் அம்மா.
அதற்குள்ளாக கொண்டு வந்த ஆரஞ்சு பழத்தில் ஜூஸ் பிழிந்து "அம்மாவிற்கு கொடுங்கள்" என்றாள் அனாமிகா.

ஜூஸை வாங்கி அம்மாவிற்கு கொடுத்து விட்டு கண்களைத்துடைத்துக் கொண்டான். "அப்புறம் அரசு . நான் மிகவும் வலிமையான பெண் மகனே இப்படிப்பட்ட செயல்களுக்கெல்லாம் எளிதில் பயந்து விடுபவள் அல்ல. இந்த இந்த மயக்கமெல்லாம் ஒரு நாடகம் தான். அப்பா சொன்னார். நான் நடித்தேன்அவ்வளவு தான்." அன்றாள் அம்மா.

"ஏதோ அரசு வீட்டுக்கு வந்தானே" என்றார் அப்பா.
"இது மருத்துவமனை அப்பா. நான் இன்னும் வீடு திரும்பவில்லை." என்றான் அரசு.

"என்ன திரும்பவும் வேதாளம் முருங்கை மரம் ஏறுகிறதா?" என்று பாபு கேட்க, "சார் கார் வந்தாச்சு. வீட்டிற்கு கிளம்புவோமா?" என்றான் ஓட்டுநர்.

"அரசு இதெல்லாம் யாரு... இந்தப் பெண்ணைப் பார்த்தால்... " என்று அனாமிகாவைக் காட்டிகேட்டாள் அம்மா.

"அது.." என்று சிரித்தான் அரசு.

"எங்களுக்குத் தெரியும். பாபு தான் எல்லாம் வந்து சொல்றாரே. ராணி உன் வருங்கால மருமகள். நம்மள பொண்ணு பார்த்து அலைய வேண்டாம்னு அவனே தன் வருங்காலத்தை தெரிந்து கொண்டான்" என்றார். பின்னாலே நின்று சிரித்த ஜே.கே."

"பேரு என்னம்மா. வா உட்கார்"

"அனாமிகா"

"அனாமிகாவா....இனியாவது எங்களை விட்டு போக மாட்டியே அரசு." என்றால் அம்மா.

"போக விட மாட்டேன் அத்தை" என்று அனாமிகா சொல்ல எல்லோரும் சிரித்தனர்.*



முற்றும்

## தேடல் - 05 சோர்வு - 01

மனிதன் ஆரோக்கியமுடன் வாழ வேண்டும் என்றால், உடல் நலமும் உளநலமும் இணைந்து இருக்க வேண்டும். பசி, தாகம், கடமை, ஆசை, விருப்பு, வெறுப்பு, பகுத்தறிவு போன்ற பல தோற்றங்கள் மனித வாழ்க்கையில் எப்போதும் காணப்படுகின்றன.

ஆனால், ஆரோக்கியத்தோடு இருந்தாலும் சில நேரங்களில் மனிதன் சோர்வடைவான். ஏன் என்று கேட்டால், அதற்கான பதிலை அவனாலே சொல்ல முடியாது. சோர்வுற்ற நிலையில் அவன் எதையும் செய்ய விரும்பாமல் படுத்திருப்பான்; சிடுசிடுப்பான்; அழுவான்; ஆனால் காரணத்தைத் தெரிந்துகொள்ள இயலாமல் திண்டாடுவான்.

சிலர் அந்தச் சோர்விலிருந்து வெளியேற முயல்வார்கள். சிலருக்கு அதை எவ்வாறு சமாளிப்பது என்று தெரியாமல் போராட்டம் இருக்கும். இன்னும் சிலர் அதை பொருட்படுத்தாமல் கணக்கின்றி விடுவார்கள்.

மனித உடல் எப்போதும் எறும்பைப் போல் சுறுசுறுப்பாக இயங்க விரும்புகிறது. எனவே "சோர்ந்து கிடப்பது" இயல்பல்ல. ஆனாலும், ஒருசில நேரங்களில் மனஅழுத்தம் உடலை அடக்கி, இயல்புக்கு மாறாகச் சோர்வடையச் செய்கிறது. அப்படிப்பட்ட சூழலிலிருந்து வெளிவருவதில் மனமும் உடலும் தகராறடையும்.

மனமொன்று பொருந்தாவிட்டால், எதையும் உடல் ஏற்காது. பசிக்காமல் புசிப்பது கடினம். தாகமில்லாமல் தண்ணீர் அருந்த முடியாது. அதுபோன்று நோயில்லாமல் மருந்து பருக முடியாது. நோயின் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டால்தான் சரியான மருந்து அளிக்க இயலும்.

**உதாரணங்கள்**

அழகிய சூழலில் வாழ்ந்து பழகியவர், விருப்பமில்லாத புதிய இடத்தில் தள்ளப்பட்டால், மனம் ஏற்காததால் அவர் சோர்வடைவார்.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# வலியின் தேடலில்

தேடல் - 05

சோர்வு - 01

ஒருவருக்குப் பிடித்த உறவு தொலைவில் வாழ்ந்தால், அவரின் குறுந்தகவலை எதிர்பார்த்தே நாள் முழுதும் தவிப்பது மனதை வலியுறுத்தி, உடல்-மூளையையும் மந்தமாக்கும்.

அன்பும் பாசமும் சூழ்ந்த சொந்தத்தோடு வாழ்ந்தவர் திடீரென தனிமைக்குள் தள்ளப்பட்டால், அதை வெறுத்து சோர்வடைவார்.

இவைகளைக்கடந்தும் நலமான சூழலுக்குள் வாழ்ந்துக்கொண்டிருப்போர் சோர்வடைகிறார்கள் என்றால் , அவர்களுக்கு ஆன்மீகத் தாகம் இருக்கலாம் அவை அவர்களுக்கு மனச்சோர்வை கொடுத்து உடல் நிலையை சோர்ந்திடச்செய்யும்.

அவர்களுக்கு அதனைக்கண்டுக்கொள்ள முடியாது.ஏனென்றே தெரியாது இருப்பவரும் உண்டு ஏனென்று ஏனென்று சிந்தித்தே கிடப்போருக்கு பதில் கிடைக்கும்.

**சோர்வை அகற்றும் வழிகள்**

1. உடற்பயிற்சி - சிறிய நடை, மூச்சுப்பயிற்சி, யோகா போன்றவை உடல்—மன அழுத்தத்தை குறைக்கின்றன.
2. இசை மற்றும் கலை - மனதிற்கு பிடித்த பாடல் கேட்பது, ஓவியம், எழுத்து போன்ற கலைச் செயல்கள் மனதைச் சீர்படுத்தும்.
3. உணவுக் கட்டுப்பாடு - ஆரோக்கியமான உணவு, போதிய தண்ணீர் உட்கொள்ளுதல் உடல் சோர்வை அகற்றும்.
4. அறிமுகம் - உரையாடல் - நம்பகமான நண்பர் அல்லது உறவினரிடம் மனதை வெளிப்படுத்துவது சுமையைப் பகிர்ந்து சோர்வை குறைக்கும்.
5. விருப்ப செயல்கள் -தோட்டப்பணி, புத்தகம் வாசித்தல், திரைப்படம் பார்ப்பது போன்றவை மனதைத் திசைதிருப்பி புத்துணர்ச்சி தரும்.
6. தியானம் - பிரார்த்தனை - மனதை ஒருமுகப்படுத்தும் ஆன்மிக வழிகள் தனிமையையும் சோர்வையும் குறைக்கும்.

கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

7. போதிய ஓய்வு - முறையான தூக்கம் உடல் மற்றும் மூளை சோர்வை அடக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

8. ஆன்மீக வழிகள்

a) உங்களுக்கு ஆன்மீகத் தாகம் இருந்தால், உம் மதஅனுஷ்டானத்தோடு தொடர்புடைய சிறு விஷயங்களை செவிமடுக்குங்கள். அது உம் இதயத்தைத் தொடும் போது, மனச் சோர்வு அகன்று, உள்ளம் புத்துணர்வடையும். புதிதாக பிறந்ததைப் போலத் தோன்றும். இதுவரை செய்த பிழைகளை நினைத்து அழத்தோன்றினால், மனதை அடக்காமல் அழுங்கள்.

b) அழுகைக்கு அனைத்தையும் கலைக்கும் வல்லமை உண்டு. குறிப்பாக இறைவனுடன் தொடர்புடைய இடத்தில் விழும் கண்ணீர், ஆன்மீகச் சோர்வை நீக்கி, உம் உள்ளத்தை முற்றிலும் மாற்றும்.

சோர்வு என்பது உடலின் பிழையல்ல, மனத்தின் பிழை. தனிமை அதனை மேலும் தீவிரப்படுத்துகிறது. ஆனால் சரியான பழக்கவழக்கங்களாலும் மன - உடல் ஒத்துழைப்பாலும் சோர்வை சமாளித்து, ஆரோக்கியமான வாழ்வை நடத்த முடியும்.



தேடலாகும்...

ஆயிரம் பொன் அரவிந்த் ; முதல் பதிப்பு ஜூன் 2025 ; வெளியீடு குமிழ் முனை பதிப்பகம் ;பக்கம் 76; விலை ரூபாய் 110; தொடர்புக்கு 9363090284




தோழர் ஆயிரம் பொன் அரவிந்த் அவர்களின் முதல் படைப்பு இந்த பிழைத்தது பட்டாம்பூச்சி கவிதை நூல். எத்தனையோ வலிகள் எத்தனையோ ஏக்கம் எத்தனையோ தவிப்பு எத்தனையோ வருத்தம் எத்தனையோ சுவைகள் என தான் உணர்ந்தவைகளையும், தான் கண்டு கேட்ட உணர்வுகளையும் பிரதிபலிக்கும் அறுபத்தாறு கவித்துளிகளால் இந்த புத்தகம் நம் மனமெங்கும் பறக்கிறது சிறகேதும் இல்லாமலேயே.

நூலில் ஒவ்வொரு பக்கமும் அவர் யாரைப் பார்த்தும் எந்தவிதமான கேள்வியும் எழுப்பவில்லை. எதைப் பற்றியும் நீதி முழங்கிய வருத்தங்கள் இல்லை. எதன் மீதான கோபத்தையும் அப்படியே கொட்டி விடவும் இல்லை. எளிமையான வரிகளால் மன உணர்வுகளை எல்லோருக்கும் புரியும்படியாக எழுதி இருப்பதன் லாவகமே வரிகள் நமக்குள் ஆழமாக தைக்கத் தொடங்கி விடுகின்றன.

வாசிக்கும் ஒவ்வொருவரின் நினைவுகளில் இருந்தும் தங்களின் பால்யத்தை திரும்பிப் பார்க்க வைக்கிறது. தங்களின் இளமையை அசை போட வைக்கிறது. தங்களின் அன்றாட வாழ்வின் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்தி வைக்கிறது.

நம்மை சிந்திக்க வைக்கும் வரிகள் அதே சமயம் வசீகரிக்கவும் செய்கின்றன. சில கவிதைகள் சிரிப்பின் போக்கில் நம்மை இழுத்துக் கொண்டு போனாலும் சில கவிதைகள் ஆச்சரியங்களை அள்ளித் தெளித்து நம்மை நம்பிக்கையின் பக்கம் இழுத்து விடுகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

காதலைச் சொல்வதாகட்டும் மனைவியின் வேதனையை புரிந்து கொள்வது ஆகட்டும் இயற்கையை ரசிப்பதாகட்டும் எல்லா இடங்களிலும் பெண்களின் மீதான மரியாதையை, இயற்கையின் மீதான ரசிப்புத் தன்மையை, அழகியலின் மீதான கருணையை விதைத்துக் கொண்டே இருக்கின்றன கவிதைகள்.

**அழுகை

குடையோடு நீ வந்ததாலோ என்னவோ
உன்னைத் தொட முடியவில்லை என்ற ஏக்கத்தில்
அழுது அழுது சாரல் மழை பெருமழை ஆனது. "

அழகான காதலுக்குள் இயற்கையின் ரசனையையும் சேர்த்து தனது உள்ளத்தின் ஆசையையும் ஒரு சேரத் தைத்து வெளிப்படுத்தும் ஏக்கமே அழுகையாகிவிட்டது.

*ஆசை

உன்னுடனே வந்துவிட
எனக்கும் ஆசைதான் என்றது அவள் பறிக்காமல் விட்ட அந்த 'பூ'. "

*அழகு

பேருந்தினுள் நிற்கும் பொழுது தனக்கு எட்டாத கம்பியை
எட்டிப் பிடிப்பதில் இருக்கிறது அவளின் அழகு. "

ஆசையும் அழகும் வாட்டி வதைக்கும் ஆண்களின் இதயத்தில் அவற்றைத் தாண்டி பீறிட்டுக் கிளம்பும் அன்பையும் நேசத்தையும் வெளிக்காட்டும் இந்த இரண்டு கவிதைகளிலும் ஒளிந்திருப்பது மதிப்பும் மகிழ்வுமே.

*கர்வம்

அபிஷேகம் செய்யப்பட்ட
பால் தயிர் இளநீர் என அனைத்தும்
கடவுளையே நனைத்து விட்டேன் என்ற கர்வத்துடன் இருந்தன கழிவுநீர்க் குழாயை அடையும் வரை. "

உலக உருண்டையின் கீழ் இயங்கும் எல்லா உயிர்களின் நகரும் மேலும் கீழுமான இயக்கத்தை சந்தித்தே தீரும் உச்சத்தில் அடைந்தவர்கள் பள்ளத்தை எட்டிப் பார்க்கத்தான் வேண்டும். கர்வமும் ஆணவமும் எப்போதும் மனதை பாரமென சுமக்க வைப்பதை யாராலும் தடுக்க முடியாது. கடவுளை தொட்டுவிட்ட சந்தோஷம் ஒருபுறம் என்றாலும் கழிவு நீரையும் சந்தித்த வேளையில் அதே மனநிலையை அவை அடைந்தால் அதுதான் துறவு என்று அர்த்தம்.

*விடாமுயற்சி

மொத்த உலகமும்
ஜன்னலுக்கு வெளியே இருக்கையில்
இவள் ஒருத்தி மட்டும் என்னையே சுற்றி வந்து
நீ மட்டும்தான் என் உலகம் என்கிறாள் போலும்.
காதருகே வந்து தன் காதலைச் சொல்ல
அயாராது முயற்சிக்கும் கொசு'.

விடாமுயற்சி பிழைப்பு என்பதெல்லாம் மனிதர்களுக்கு மட்டுமா சொந்தம் இல்லை கொசுக்களுக்கும் தொடர்ச்சியான தங்களது வாழ்க்கைப் பாதையை நகர்த்திக் கொள்வதற்கு உழைக்க வேண்டியது அவசியமே. கொசுவின் ரீங்காரம் கவிஞருக்கு காதலாக செவிகளில் எதிரொலிக்கிறது..

*வலி

கூடுவிட்டு கூடு பாயும் வித்தையைக் கற்று
அவனை ஆன்மா
அவளது உடலினுள்
செல்ல ஆசைப்படுகிறது
மாதம் ஒருமுறை அவள் அனுபவிக்கும் வலி
இன்னதென்பதை உணர்வதற்காக.
ஒருவேளை அது முடியாவிட்டால் பிரசவத்தின் போதும்
அவளின் கைகளை இறுகப்பற்றிக் கொள்ள
ஆசை அவனுக்கு.
சுகத்தில் மட்டுமல்ல
அவளது வலியிலும்
பங்கு வேண்டும் என்பதற்காக.'

பாலியல் சீண்டல்களும் பாலியல் வன்முறைகளும் பெண்களை படாதபாடு படுத்தி கொலை செய்வதற்கும் தயங்காத சூழலில் அவர்களைக் கொண்டு நிறுத்தி விடுகிறது. அதேவேளையில் பெண்களை மதித்து அவர்களுக்கான உரிமைகளை வழங்கி அவர்களது வலியையும் வேதனையையும் உணர்ந்து கொள்ளும் ஒவ்வொரு மனதிலும் தெய்வம் நிலை கொண்டு விடும் என்பதே உண்மை. பண்டைய காலத்தில் இருந்து இன்று வரை பெண்களை போகப் பொருளாகவும் பிள்ளை பெற்றுத் தரும் இந்திரங்களாகவும் பார்த்து பழகிவிட்ட சமூகத்திற்கு அவர்களது வலியையும் வேதனையையும் போக்குவதற்கான எந்த ஒரு மனப்பாங்கும் தோன்றுவதில்லை. கால ஓட்டம் ஆணுக்குச் சமமாக பெண்ணை நிறுத்தி வைக்கும் இன்றைய காலகட்டத்திலும் பெண்களின் மீதான வன்முறைகள் அதிகரிப்பதன் காரணத்தை அவசியம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஒவ்வொரு ஆண்களுக்கும் இந்த கவிதை நிச்சயம் மனதிற்குப் பிடிக்கும்.

*முயற்சி

தேம்பித் தேம்பி அழுத நாட்களைப் பற்றியெல்லாம் சிரித்துக்கொண்டே அவளிடத்தில் சொல்வேன்
என்ற நம்பிக்கையில முடிக்க முயற்சிக்கிறேன் அழுகையை."

மேடு பள்ளங்களைக் கடந்து துன்பங்களையும் துயரங்களையும் துடைத்தெறிந்துவிட்ட நம்பிக்கையில் ஒவ்வொரு மனமும் ஆனந்தக் கண்ணீரும் விடக்கூடும். ஓர் ஆண் எத்தகு சூழலிலும் தன்னை நம்பி வந்த பெண்ணின் முன்னால் அழுவது என்பதை பெரும்பாலும் விரும்புவதே இல்லை. துன்பமும் துயரமும் தொடர்ந்தாலும் பெண்ணின் முன்னால் நம்பிக்கையோடு பாதை காட்டும் அவனின் முயற்சியும் உழைப்பும் போற்றத்தக்கது.

**அவன் அழுகிறான்

எரியுமேடி
எதுக்கு சிரிக்கிற? எனக் கேட்ட அவனின் கண்களில் கண்ணீர். 'கொழந்தையா இருந்தா கூட எனக்கு இவ்ளோ பணிவிட செஞ்சிருக்க மாட்ட இல்ல' வெந்நீரை ஊற்றிக்கொண்ட அவளின் இரு கைகளுக்கும் மருந்தினைத் தடவும் பொழுது கணவன் அழுகிறான் மனைவி சிரிக்கிறாள்."

பெரும்பாலும் எல்லா குடும்பங்களிலும் பெண்கள் எல்லாவற்றையும் தாங்கும் குணம் கொண்டவர்களாகவே வளர்ந்து விடுகின்றனர். தனது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஏதேனும் நேரும்போது துடியாய் துடிக்கும் அவர்கள் தங்களுக்கு ஒன்று வருகையில் அதை எந்த சூழலிலும் வெளிப்படுத்தாமல் தங்களுக்குள்ளேயே ஒளித்து வைத்துக் கொள்வார்கள். உதிரத்தில் பிறந்து உதிரத்தை ஒவ்வொரு மாதமும் கண் கொண்டு பார்த்து உதிரத்தில் பிரசவிக்கும் ஒவ்வொரு பெண்களும் தங்களின் வலியை

பெரும்பாலும் வெளிப்படுத்துவதில்லை என்பதையே இந்தக் கவிதை அறிவுறுத்துகிறது..

**நீதிபதியின் தவிப்பு

தீர்ப்பெழுத தவிக்கும் நீதிபதி மனைவிக்கும் அம்மாவுக்கும் இடையிலான வழக்கில்."

காலம்காலமாக வீட்டுக்குள் தாயையும் தாரத்தையும் சமன்படுத்தி வாழ்வை அமைத்துக் கொள்வதில் ஆண்கள் கூடுதல் கவனமெடுக்கிறார்கள். இதையே நீதிபதிக்கும் பொருத்திப் பார்க்கும் இந்த வரிகள் வாசிக்க சிரிப்பை ஏற்படுத்தினாலும் அதன் பின்னால் இருக்கும் வலியையும் பொறுப்பையும் உணர்த்தவும் செய்கிறது.

**விட்டுக்கொடுத்தல்

ஒவ்வொரு முறையும் ஜன்னலோர இருக்கையை தேர்ந்தெடுத்துப் பயணித்தவன் திருமணத்திற்குப் பிறகு தன் மனைவிக்கு அதை கொடுப்பதில் ஆரம்பிக்கிறது விட்டுக்கொடுத்தல்."

இல்லறத்தின் போக்கு நல்லறமாக விளங்கிட தம்பதியரின் புரிதலும் விட்டுக்கொடுத்தலும் அச்சாணியாகின்றன. தனக்கான சௌகர்யங்களையும் தன்னை நம்பி கரம்பற்றியவருக்கு விட்டுக்கொடுப்பதில் பெரிதும் மகிழ்வடைபவர்களாக இருப்பதில் ஆண்கள் மகிழ்வடைகிறார்கள்.

**தாய்மை

பிரசவத்தின் போது ஏற்படும் வலி
இன்னதன்று தெரிந்திருந்தும் அடுத்த குழந்தைக்கு தயாராகும் ஒரு பெண்ணிற்கு தெரியும் தாய்மையின் சுகம் அதனிலும் மேலானது என்று.""

பெண்மையில் பூக்கும் தாய்மையில் தன்னை மட்டுமல்ல உலகத்தையும் ரசித்து உயிர்களை ஆராதிக்கும் பெண்ணை உணர்ந்து கொள்ளும் ஒவ்வொருவருக்குள்ளும் அன்பே ஒளிர்ந்து வெளிச்சத்தை விதைக்கும்.

**பயணம்

பிறந்தவுடன் தொடங்கி விடுகிறோம்
மரணத்தை நோக்கி பயணத்தை பிறகு எதற்கு அவசரம்? மெதுவாக பயணிப்போம்."

வாழ்வும் வழிபாடும் நகர்தல் என்பது வாழ்வின் முடிதலை நோக்கித்தானே. பிறப்பு நாமறியாததாயின் இறப்பை நோக்கிய பயணத்தில் செய்யும் செயலின் வழியே எல்லோருக்குள்ளும் நம்மை இருத்திவைத்தலே வாழ்வின் பெரும்பயனாகிறது.

**கதை சொல்கிறாள்
ஒரு கதை
சொல்லக் கேட்டேன் அவளிடம். ஓராயிரம் கதைகள் சொல்கின்றன
அந்த இரு கம்மல்களும் அவளின் தலை அசைவில்."


காதலின் பாதைக்குள் நுழைந்துவிட்ட மனதில் காணும் காட்சியெல்லாம் அழகும் ரசனையும் பொங்கி வழியும். சின்னச் சின்ன காட்சிக்குள்ளும் பெரிய பெரிய தத்துவங்களையும் வியக்கத்தக்க வரிகளையும் எழுதிச் செல்கிறது கவிதை.

**பிழைத்தது பட்டாம்பூச்சி

சாலையைக் கடக்க முயன்ற போது
லாரியில் அடிபட்ட பட்டாம்பூச்சி உயிர் தப்பிப் பிழைத்தது
அந்த லாரி சரக்கு ஏற்றாமல் இருந்ததால்."

## பிழைத்தது பட்டாம்பூச்சி (கவிதைத் தொகுப்பு)

வாழ்வின் போக்கில் இன்பமும் துன்பமும் சேர்ந்தே உயிர்களின் இயக்கத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றன. இடையறாத போராட்டத்திலும் சிறகை விரித்துக் கொண்டிருக்கும் பட்டாம்பூச்சியின் பிழைத்தல் என்பது அதன் முயற்சியும் நம்பிக்கையும் உழைப்பும் கொடுத்த பலன்கள். அதைப்போல வாழ்வின் போக்கில் எத்தனையோ தடைகள் வந்தாலும் ஒவ்வொன்றுக்கும் தீர்வுகளை நோக்கி நகர்வதும் அதனூடே இன்பத்தை அனுபவிப்பதும் மனிதனின் அன்றாட போக்குகளாக மாறிவிட்டன. இப்படி ஒரு சூழலில் வாழ்வின் சிக்கல்களும் வலிகளும் கடந்து நம் உள்ளங்களை நெகிழ வைக்கும் கவிதைகளால் பிழைத்தது பட்டாம்பூச்சி நூலை எழுதியிருக்கும் ஆயிரம் பொன் அரவிந்த் அவர்களின் எண்ணங்கள் மேலும் மேலும் நிறைய பட்டாம்பூச்சிகளை சிறகடிக்க உதவட்டும்..




கவிஞர் இளையவன் சிவா

# சுத்தானந்த பாரதி

கட்டுரை

### பிறப்பு, கல்வி



சுத்தானந்த பாரதி பனையூரைச் சொந்த ஊராகக்கொண்ட சிவிகுல ஜடாதரய்யருக்கும் காமாட்சி அம்மையாருக்கும் நான்காவது குழந்தையாக மே 11, 1897-ல் சிவகங்கையில் பிறந்தார். இயற்பெயர் வேங்கட சுப்பிரமணியன். இளமையிலேயே தந்தையை இழந்த சுத்தானந்த பாரதியார் மதுரையில் தன் தாய்மாமாவுடன் தங்கிப் படித்தார். சுத்தானந்த பாரதி சிவகங்கையில் ஐந்து வயதில் ரங்க ஐயங்கார் திண்ணைப் பள்ளியில் படித்தார். பின்னர் அரசர் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தபின் மதுரைக்குச் சென்று மதுரை பசுமலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்றார்.

### ஆன்மீகம்

சுத்தானந்த பாரதி சிறுவயதிலேயே பூரணானந்தர், ஞானசித்தர். ரமணர், அரவிந்தர். மேஷர்மிபாபா, சிவானந்தர் எனப் பல ஆன்மிக யோகிகளைச் சந்தித்து ஆன்மீகத்தாக்கத்தை அடைந்தார். சுத்தானந்த பாரதி அரவிந்தரால் யோகி என்றும் சுவாரி சிவானந்தரால் ரிஷி என்றும் சிருங்கேரி நரசிம்ம பாரதி ஸ்வாமிகளால் கவியோகி என்றும் அழைக்கப்பட்டார். இந்தப் பெயர்களில் அரவிந்தர் கொடுத்த பெயரே நிலைத்தது.

### சுத்தானந்த பாரதி - அரசியல்

சுத்தானந்த பாரதி மதுரை பசுமலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஜி.சுப்பிரமணிய ஐயர், சுப்ரமணிய சிவா ஆகியோருடன் நட்பு ஏற்பட்டது. அதன் வழியாக சுத்தானந்த பாரதி இந்திய நாட்டு விடுதலையில் ஈடுபாடு கொண்டார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# சுத்தானந்த பாரதி

கட்டுரை

## இலக்கியப் பணிகள்

சுத்தானந்த பாரதி வ.வே.சுப்ரமணிய ஐயரின் சேரன்மாதேவி குருகுலத்தில் ஆசிரியராக பணியாற்றினார். அப்போது அவர்கள் நடத்திவந்த பாலபாரதி இதழில் தொடர்ச்சியாக எழுதினார். சுத்தானந்த பாரதி தமிழில் காப்பியம், கவிதை, நாடகம், நாட்டியம், இசைப்பாடல் வரலாறு, கடித இலக்கியம், வாழ்க்கை வரலாறு, சுயவரலாறு, நாட்டுவரலாறு, புனைகதைகள், பயண இலக்கியம், சிறுகதை, இலக்கிய விமர்சனம், மொழிபெயர்ப்பு, குழந்தை இலக்கியம் ஆன்மிகம், உடல்கூறு ஆய்வு, யோகம் எனப் பல துறைகளில் எழுதியவர். அவர் ஆரம்பகாலத்தில் எழுதிய 'பைந்தமிழ்ச் சோலை' என்ற நூல் தமிழின் தொன்மை, இலக்கிய வளம் பற்றிக் கூறுகிறது. தமிழ் இலக்கியங்கள் பண்டிதர்களுக்காகவே எழுதப்பட்ட காலக்கட்டத்தில் சாதாரண வாசகன் புரிந்து கொள்ளும்படி எழுதியவர் சுத்தானந்த பாரதி.பழைய இலக்கியங்களை கல்வியாளர் அல்லாதவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தவர்களில் அவரும் ஒருவர்.

## புனைவிலக்கியம்

சுத்தானந்த பாரதி பத்து சிறுகதைத் தொகுதிகளையும், 19 நாவல்களையும் எழுதியுள்ளார். அவருடைய கதைகள் தொடர்ச்சியாக வெவ்வேறு இதழ்களில் வெளிவந்தாலும் முறையாகத் தொகுக்கப்படவில்லை.

## மெய்யியல் நூல்கள்

யோகியான சுத்தானந்த பாரதியாரின் குறள்பா வடிவிலான யோகசித்தி என்ற நூல் அவரின் அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்தது. அதில் 12 இயல்களும் 405 குறள்பாக்களும் உள்ளன. இதற்கு அவரே உரையும் எழுதியிருக்கிறார். அதே நூலை அவர் 'The Gospel of Project Life' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்த நூல் அவரது 'பாரதசக்தி' காப்பியத்தின் ஒரு பகுதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### கவிதை

சுத்தானந்த பாரதி பாரதியாருக்குப்பின் உருவான இரு கவிதை மரபுகளில் நாமக்கல் கவிஞர் மரபு எனப்படும் போக்குடன் அடையாளப்படுத்தப்படவேண்டியவர். எளிய மொழி, சந்தம், நேரடியான கூறுமுறை, நாட்டாரியல் பாடல்முறைகளின் செல்வாக்கு கொண்டவை அவருடைய கவிதைகள்

### காவியம்

சுத்தானந்த பாரதியின் முதன்மை நூல் அவர் பாரதமாதாவை நாயகியாக்கி எழுதிய 'பாரத மகாசக்தி' காப்பியம். ஐந்து காண்டங்களும் 416 படலங்களும் 50000 பாடல்களும் கொண்டது. 1948-ல் வெளிவந்தது. அதன் மறுபதிப்பு 1969-ல் வந்தது.

### பயணநூல்கள்

சுத்தானந்த பாரதி சென்று வந்த நாடுகள் ரஷ்யா, இலங்கை, மலாயா (மலேசியா), தாய்லாந்து, ஜப்பான், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா, இத்தாலி ஆகியவை. அவற்றைப் பற்றிய பயணக்கட்டுரைகளை எழுதியிருக்கிறார். 'நான் கண்ட ரஷ்யா', 'நான் கண்ட ஜப்பான்' அவருடைய நூல்களில் புகழ்பெற்றவை.

### நாடகப்பணி

சுத்தானந்த பாரதி அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் இயற்றியுள்ளார். சீவக சிந்தாமணி (காமதிலகன்) சிலப்பதிகாரம் (கண்ணகி) மணிமேகலை (அமுதசுரபி) கம்ப ராமாயணம் (மாயமான், ராமதூதன்) போன்ற இலக்கியங்களை வேறு தலைப்புகளில் நாடகமாக்கினார். அவரது சரித்திர நாடகங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே அரங்கேறின.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### திரைப்படம்

சுத்தானந்த பாரதி தீவிரமாக நாடகங்கள் எழுதிய காலகட்டத்தில் (1930-1940) தயாரிப்பாளர்கள் அவரது நாடகங்களை படமாக்குவதில் ஆர்வம் காட்டினர். சுத்தானந்த பாரதி ஆண்டாள், கிருஷ்ண பக்தி, அபூர்வ சிந்தாமணி, ஏழை படும் பாடு, பொன்வயல் (கல்கியின் பொய்மான் கரடு) போன்ற சினிமாக்களுக்கு உரையாடல் எழுதியுள்ளார். பொன்வயல் சினிமாவில் வரும் சிரிப்புத்தான் வருகுதய்யா (சீர்காழி கோவிந்தராசன் பாடியது) என்ற பாடல் அவர் எழுதியது.

### தமிழ் இசை

சுத்தானந்த பாரதியின் முக்கியப் பங்களிப்புகளில் தமிழ் இசையைப் பரப்பியதும் ஒன்று. சுத்தானந்த பாரதி கர்நாடக இசையை முறையாகப் படித்தவர்.அவரது இசை நூல்களில் கீர்த்தனாஞ்சலி, மேளராக மாலை சங்கீத ரத்னாகரம் ஆகியன முக்கியமானவை. அண்ணாமலை செட்டியார் அவரது தமிழிசை கீர்த்தனைகளை அச்சிட்டு இலவசமாக விநியோகித்தார். சுத்தானந்த பாரதி நாட்டிய சாஸ்திரம் பற்றி நவரச நடனாஞ்சலி என்னும் நூல் இயற்றியிருக்கிறார். அவருடைய கீர்த்தனைகள் அடங்கிய கீர்த்தனாஞ்சலி என்னும் நூல் வெளிவந்துள்ளது.

### இதழியல்

சுத்தானந்த பாரதி வ.வே. சுப்ரமணிய ஐயர் நிறுவிய சேரன்மாதேவி குருகுலத்திலிருந்து வெளிவந்த பாலபாரதி பத்திரிகையை முழுப்பொறுப்பு எடுத்து நடத்தினார். கும்பகோணத்திலிருந்து வெளிவந்த சமரசபோதினியின் ஆசிரியர் குழுவில் இருந்தார். தி.ஜ.ரங்கநாதன் சமரசபோதியின் சுத்தானந்த பாரதியுடன் பணியாற்றினார். காங்கிரஸ் தலைவர் டி.பிரகாசம் நடத்திய 'ஸ்வயராஜ்யா' இதழிலும் சுத்தானந்த பாரதி ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

சுத்தானந்த பாரதி நடத்திய ஆங்கிலப் பத்திரிகைகள் 'Renaissance', 'Call - Divine', Nector' 'Jeevan Prakash' ஆகியன. சுத்தானந்த பாரதி தன் இறுதிக்காலத்தில் சென்னை அடையாற்றில் வாழ்ந்தபோது, 'யோகப் பயிற்சி' என்ற பத்திரிகையை நடத்தியிருக்கிறார்.

**நூல்கள் பட்டியல்**

சுத்தானந்த பாரதியாரின் 29 நூல்கள் இணையநூலகச் சேமிப்பில் உள்ளன.

- உடலுறுதி
- கவிக் கனவுகள்
- நவரஸ நடனாஞ்சலி
- தமிழ்க் கனல்
- அன்னை
- நாகரிகப் பண்ணை
- இதுதான் உலகம்
- கலிமாவின் காதல்
- கல்விக்கதிர்
- திருக்குறள் இன்பம்
- மணிமேகலை அமுதம்
- சுத்தானந்தர் வரலாறு
- திருமந்திர விளக்கம்
- தியான சாதனம்
- பேரின்பம்
- அருட்செல்வம்
- ஞானி எமர்ஸன்
- பெரியவாள் கதை
- நாவலர் பெருமான்
- சிவானந்த ஜோதி
- பாரத சக்தி மகா காவியம்
- பேரின்ப மாலை வீரர் பாட்டு
- தன்வரலாற்று நூல்
- விஞ்ஞான மணிகள்
- கீர்த்தனாஞ்சலி
- பாரத கீதம்
- இளிச்சவாயன்
- இவளும் அவளும்
- இல்லற ஒழுக்கம்
- பாப்பா பாட்டு
- பொது நெறி
- பாட்டாளி பாட்டு
- சிலம்புச் செல்வம்
- நாட்டியக் கலை விளக்கம்
- ஆன்மிகம்
- பகவத் கீதை
- ஸ்ரீ அரவிந்த யோக தீபிகை
- யோக சித்தி
- வாழ்க்கை வரலாறு
- நாவலர் பெருமான்
- தயானந்த ஜோதி
- அருட்பெருமான்
- காவியம்
- கவிதை
- வளையாபதி அகவல்
- ஆத்ம சோதனை

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## நூல்கள் பட்டியல்

சுத்தானந்த பாரதியாரின் 29 நூல்கள் இணையநூலகச் சேமிப்பில் உள்ளன.

- தன்வரலாற்று நூல்
- ஆத்ம சோதனை
- சோதனையும் சாதனையும்
- கதைச் சுருக்கங்கள்
- விக்டர் ஹியூகோவின் Les Miserable - ஏழைபடும் பாடு (தமிழ்)
- The Laughing Man - இளிச்சவாயன் (தமிழ்)
- டிவைன் காமெடி - தாந்தே - 1940 (தமிழினி பதிப்பகம் வழி 1998-ல் இரண்டாம் பதிப்பாக வந்திருக்கிறது)
- இசை ஆசிரியர்கள் வரலாறு
- பூச்சி அய்யங்கார்
- மதுரை பொன்னுசாமிப் பிள்ளை

புதுக்கோட்டை சமஸ்தான ஆஸ்தான இசைக்கலைஞர் ஹரிதீர்த்தம் அய்யர்

ஆங்கிலம்

- Sri Aurobindo
- Integral Yoga
- The Gospel of Perfect Life
- Yogi Shuddhananda
- Yoga for All
- Our religion
- Cosmic Riddles
- Lord Krishna and His Gospel
- Experiences of a Pilgrim Soul

## மறைவு

யோகி சுத்தானந்த பாரதி அவர்கள் தன் தொண்ணூற்றி இரண்டாவது வயதில் சிவகங்கை மாவட்டம் சோழபுரத்தில் மார்ச் 7, 1990-ல் சமாதியானார்.

## நாட்டுடைமை

சுத்தானந்த பாரதியின் படைப்புகளை தமிழக அரசு 1998-ல் நாட்டுடைமை ஆக்கியது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை நமதே

முயற்சி செய்ய தயங்காதே

முயலும்போது

முட்களும்

உன்னை முத்தமிடும்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com